பக்கங்கள்:11
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 14 புதன்கிழமை 27.04.2022 கதிர் 173

### இது ரகசியம் அல்ல!

'யதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்பார்கள். பல சமயங்களில் இப்படி யதார்த்தமாகப் பேசி வாங்கிக் கட்டிக் கொள்ளும் ஒரு தமிழ் அரசியல்வாதி நம் மத்தியில் இருக்கின்றார் என்றால் அவர் சுமந்திரன்தான் என்று அரசியல் அரிச்சுவடி ☞2

# பெரும்பான்மை இல்லாவிட்டால் விலகி விடுவேன்

## எந்தச் சந்தேமும் வேண்டாம் என்கின்றார் பிரதமர் மஹிந்த



கொழும்பு, ஏப்ரல் 27

"பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் என் பக்கம்தான் இருக்கின்றார்கள். பெரும்பான்மையினரின் ஆதரவு எனக்கு இருக்கும் வரை நான்தான் பிரதமர். நாடாளுமன்ற பெரும்பான்மையை நான் வைத்திருக்கும் வரை நான் இப்படித்தான் இருப்பேன். அது அரசமைப்பு ரீதியாக – சட்டரீதியாக – எனக்கு உள்ள உரிமை. பெரும்பான்மையினரின் ஆதரவு எனக்கு இல்லாவிட்டால் நானாகவே விலகி விடுவேன்."

– இவ்வாறு திட்டவட்டமாக தெரிவிக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. ☞9

## உலக வங்கியிடமிருந்து 60 கோடி டொலர் உதவி

இலங்கைக்கு 60 கோடி அமெரிக்க டொலர் (சுமார் 21 ஆயிரம் கோடி ரூபா) நிதி உதவியை வழங்குவதற்கு உலகவங்கி இணங்கியுள்ளது என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. ☞2



## மொட்டுவின் இளம் எம்.பிக்கள் சீனத் தூதருடன் நேற்றுப் பேச்சு




இலங்கைக்கான சீனத் தூதுவர் பொதுஜன பெரமுன கட்சியின் இளம் நாடாளுமன்றஉறுப்பினர்களான முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, வர்த்தக அமைச்சர் செஹான் சேமசிங்க மற்றும் வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோரை நேற்று சந்தித்துக் ☞05

## பொதுத்தேர்தலே ஒரே வழி ஜே.வி.பி. தலைவர் கருத்து

பொதுத் தேர்தலை நடாத்தி புதிய அரசாங்கத்தை அமைப்பதே தற்போதுள்ள நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான ஒரே வழி என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கருத்து தெரிவிக்கும்போதே ☞9



## நிதி அமைச்சர் அலி சப்ரி நீதி அமைச்சருமானார்!



நிதி அமைச்சர் அலி சப்ரி நீதி அமைச்சராகவும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று அவர் மீண்டும் நீதி ☞2

## சமையல் எரிவாயுவின் விலை 2,185 ரூபாவினால் அதிகரிப்பு

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய 2,675 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வந்த 12.5 கிலோ ☞05

# 13ஐ முழுமையாக அமுல்படுத்துவேன்!

## சஜித் திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 27

அனைத்து ஜனநாயக வழிமுறைகளையும் பின்பற்றி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை அகற்றி, 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகத் தாம் அமுல்படுத்த உள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். ☞9



### கொழும்பு அரசியலில் நடப்பதென்ன..?

சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர்
- ஆர்.சிவராஜா-
எழுதும் நேரடி ரிப்போர்ட்
10 ஆம் பக்கத்தில்



## நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழர் நடுநிலை வகிக்க வேண்டும்!

### காரணங்களை விளக்குகின்றார் விக்னேஸ்வரன்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஏப். 27

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்பதே எனது கருத்து என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் ☞9

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் யாழ்.நகரில் அமெ. தூதருடன் பேச்சு




(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஏப். 27

வடக்கிற்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்திருக்கும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங்கை வடக்கு – கிழக்கு வலிந்து ☞2

## விக்னேஸ்வரனின் கருத்துடன் முரண்படுகின்றார் ஸ்ரீகாந்தா

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் தமிழர்கள் நடுநிலைமை வகிப்பதே சிறந்தது என நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கும் கருத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என் ☞9



# கௌதாரிமுனையில் சீன நிறுவனத்தின் கடல் அட்டைப் பண்ணைக்கு மூடுவிழா


முன்னர் கடல் அட்டைப் பண்ணை இருந்தபோது சிறீதரன் எம்.பி. திடீரென அங்கு போய் பார்வையிட்டபோது...

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், ஏப்.27

பூநகரி கௌதாரிமுனையில் சீனக் கூட்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்ட கடல் அட்டைப் பண்ணையைத் தொடர்ந்தும் பராமரிக்க முடியாத நிலையில் அது முழுமையாக அகற்றப்பட்டது.

பூநகரியில் கடந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் புதிதாக அமைக்கப்பட்ட இந்தக் கடலட்டைப் பண்ணைஅப்போது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்தது. உள்ளூர் அமைப்புக்களினதோ, மாவட்ட நீரியல் வளத் திணைக்களத்தினதோ அனுமதி இன்றி இது அமைக்கப்பட்டதாக அப்போது கடும் விமர்சனம் முன் வைக்கப்பட்டது. இதே நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் கடல் அட்டை குஞ்சு உற்பத்திப பண்ணை ஒன்றும் உள்ளது.

இந்த சர்ச்சையின் மத்தியில் கடந்த ஆண்டு இறுதியில் யாழ்ப்பாணம் வந்த சீனாவின் இலங்கைக்கான தூதுவர் அரியாலையில் உள்ள பண்ணைக்கும் நேரில் பயணித்தார்.

இந்த நிலைமையில் தற்போது இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் எரிபொருளை பெறுவதில் உள்ள சிரமத்தின் காரணமாக இந்தப் பண்ணையைப் பராமரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அதனால் பூநகரி கௌதாரி முனையில் அமைக்கப்பட்டிருந்த கடல் அட்டைப் பண்ணை முழுமையாக அகற்றப்பட்டுள்ளது.


கடல் அட்டைப் பண்ணை அகற்றப்பட்ட பின்னர் எஞ்சிக் கிடக்கும் சிதிலங்கள்

இந்த பண்ணையின் பாராமரிப்பாளர்களுடனான தொடர்பாடல், அவர்களிற்கான உணவு விநியோகம் அனைத்தும் தினமும் அரியாலையில் இருந்தே படகு வழியாக மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படித்த பிள்ளையும் கூடக் கூறிவிடும். அவ்வளவு தூரத்துக்கு அடிக்கடி வாயைக் கொடுத்து வாங்கி கட்டுபவர் சுமந்திரன். இப்போதும் ஒரு விடயத்தில் வாங்கி காட்டுகின்றார்.

இம்முறை வடக்குக் கிழக்கில் அல்ல. தெற்கில். அதுவும் தெற்கில் இதுவரை அவருடன் சேர்ந்து இயங்கியவர்கள் என்று கருதப்பட்ட சிலரே அவர் மீது பாயத் தயாரான கோபத்துடன் காத்து கிடக்கின்றார்கள். விடயம் அப்படி ஒன்றும் பெரிய விவகாரம் இல்லை. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான அவரது பகிரங்கக் கருத்தினால் எழுந்த சர்ச்சைதான்.

ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும், அவரது அரசைக் கலைக்க வேண்டும் என்று மற்றைய எதிரணித் தலைவர்களுடன் சேர்ந்து ஆரம்பத்திலிருந்து குரலெழுப்பி வருபவர்தான் சுமந்திரன்.

சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி, நம்பிக்கையில்லாப் பிரேரணையை தயாரித்தபோது அதற்கு சுமந்திரனின் அங்கீகாரமும் இருந்தது என்றே கருதப்பட்டது. அச்சமயத்தில் அரசிலிருந்து வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்ட எம்.பிகள் – குறிப்பாக விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றோர் – இடைக்கால அரசு அமைக்கும் முயற்சியில் தீவிரமாக இருந்தனர்.

ஆனால் நந்தி போலக் குறுக்கே இருக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு விலகி, இடம் விட்டுக் கொடுக்காவிட்டால் தமது இடைக்கால அரசு முயற்சி சாத்தியமற்றது என்பதை புரிந்து கொண்ட விமல் வீரவன்ஸ – உதய கம்மன்பில அணி, மஹிந்தரின் அரசைப் பதவி இழக்கச் செய்யும் நோக்குடன் மஹிந்த அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை நகர்த்தும் வேலையைத் தங்கள் தலையில் சுமக்கத் தயாராகி அறிக்கை விட்டனர். அதை அவதானித்ததும் சுமந்திரன் உஷாராகி விட்டார்.

விமல் வீரவன்ஸ – உதய கம்மன்பில அணி இடைக்கால அரசைத் தாங்கள் கைப்பற்றுவதை இலக்கு வைத்துத்தான் இப்போது நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கதாயுதத்தை தூக்கி இருக்கின்றது என்பதை புரிந்துகொண்ட சுமந்திரன் அதிரடி அறிக்கை ஒன்றை – அறிவிப்பு ஒன்றை – வெளியிட்டார்.

"கண்மூடித்தனமாக நம்பிக்கை இல்லாப் பிரேரணையைத் தமிழ்க் கூட்டமைப்பினராகிய நாம் ஆதரிக்க மாட்டோம். அந்தப் பிரேரணை வென்றால் அதன் பின்னர் என்ன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். அதற்குப் பின்னர் விடயங்களில் எமக்கு நம்பிக்கை ஏற்படும் என்றால்தான் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாம் ஆதரிப்போம்" – என்று சுமந்திரன் கூற, தெற்கில் பலரும் சீறத் தொடங்கிவிட்டனர். குறிப்பாக ராஜபக்ஷ அரசை எப்படியும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதில் குறியாய் இருந்த பலஅரசுசாராதொண்டுநிறுவனங்களின் பிரபலங்கள் தனிப்பட்ட முறையில் சுமந்திரனைத் திட்டத் தொடங்கிவிட்டார்கள்.

அவர்களைப்பொறுத்தவரைதமிழர்களின் நிலைப்பாடு என்பதை விட ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்புவதுதான் முக்கியம். அதற்கு சுமந்திரன் ஒத்துழைக்காமல் ராஜபக்ஷக்களிடம் விலை போய் விட்டார் என்றும் கூட வாய் கூசாது அவர்கள் விமர்சிக்க தொடங்கி விட்டனர் எனத் தெரிகிறது.

இதற்கிடையில் நேற்று மாலை விமல் வீரவன்ஸ தலைமையிலான அணி ஜனாதிபதியை நேரில் சந்தித்திருப்பதாகத் தெரிகிறது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 120 எம்பிக்களின் ஆதரவு உண்டு என்று ஒரு பட்டியலை அக்குழுஜனாதிபதியிடம்கையளித்ததாம்.

அதைப் பார்வையிட்ட ஜனாதிபதி அதில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் விவரமும் அடங்குவதைச் சுட்டிக்காட்டி இந்தப் பிரேரணையை ஆதரிக்கும் நிலைப்பாட்டை இன்னும் கூட்டமைப்பு எடுக்கவில்லைஎன்றுகேள்விப்படுகிறேன் என்றாராம்.

தங்கள் தரப்பில் ஒரு சிரேஷ்ட பிரதிநிதி சுமந்திரனுடன் இதுபற்றிப் பேசி இணக்கத்தை பெற்றிருக்கின்றார் என்று அப்போது ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டதாக அறிய வந்தது.

இந்தத்தகவல் குறித்து சுமந்திரனுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனாலும் சுமந்திரனும் கூட்டமைப்பின் ஏனைய எம்பிக்களும் விமல் வீரவன்ஸ – உதய கம்மன்பில போன்ற பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் கைகள் ஓங்க கூடிய ஓர் அரசு உருவாவதற்கு எந்த வழியிலும் உதவ மாட்டார்கள் என்றே அவர்களின் உள்வீட்டில் பேசப்படுகின்றது. நாளை, நாளை மறுதினங்களில் இந்த விடயத்தில் ஒரு தெளிவு பிறக்கும். அது வரைப் பொறுத்திருப்போம்!

– மின்னல் –

---

## காணாமலாக்கப்பட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கப் பிரதிநிதிகள் நேற்றைய தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்று மதியம் 12 மணியளவில் கொக்குவிலில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்புக்கு பின்னர் வடக்கு கிழக்கு வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா கருத்து தெரிவிக்கையில் –

எமது உறவுகள் காணாமலாக்கப்பட்ட விதம், எமது போராட்டங்கள், எமக்குள்ள பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்க தூதுவரிடம் நாம் விளக்கிக் கூறி இருந்தோம்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் எமது எதிர்ப்பையும் மீறி உருவாக்கப்பட்டது என்பதை அவருக்கு தெளிவாகக் கூறியமையுடன் அந்த அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட சில விவரங்களுக்கு இதுவரை நடவடிக்கையை எடுக்கப்படாதமை தொடர்பாகவும் கூறியிருந்தோம். அத்துடன் மீண்டும் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை நம்புமாறு எம் மீது அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டாம் எனவும் தெரிவித்திருந்தோம்.

தான் ஒரு குழந்தைக்கு தாய் என்றும், எங்கள் துயரங்கள், வேதனைகள் தனக்கும் புரிகின்றன எனவும் அமெரிக்கத் தூதுவர் எம்மிடம் எடுத்துரைத்தார்.

நாம் இலங்கையின் நீதிப் பொறிமுறையில் நம்பிக்கையில்லை எனவும், சர்வதேச நீதிப் பொறிமுறையே எமக்கு வேண்டும் எனவும் தெரிவித்தோம். – என்றார்.

---

## நிதி அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

அலி சப்ரி தற்போது வகிக்கும் நிதி அமைச்சர் பதவிக்கு மேலதிகமாகவே அவருக்கு நீதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

---

## உலக வங்கியிடமிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இலங்கைக்கு 60 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது எனவும், அதில் முதற்கட்டமாக 40 கோடி அமெரிக்க டொலர்கள் உடனடியாக வழங்கப்படும் எனவும் உலகவங்கியின் நிரந்தரப் பிரதிநிதி ஷியோ கான்டா நேற்றைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தபோது தெரிவித்தார் எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருந்து,சுகாதாரத் தேவைகள், சமூகப் பாதுகாப்பு, விவசாயம்,உணவுப் பாதுகாப்பு மற்றும் எரிவாயு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்த நிதி பயன் படுத்தப்படும். தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்குவோம் எனவும் உலக வங்கி பிரதிநிதிகள் இந்த சந்திப்பின்போது தெரிவித்துள்ளனர்.



உலக வங்கியின் இலங்கைக்கான ஆலோசகர் ஹுசாம் அபுதாகா, மனித அபிவிருத்தித் தலைவர் ரெனே சோலானோ, நிதி அமைச்சர் அலி சப்ரி, வர்த்தக மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் ஹெறான் சேமசிங்ஹ, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.எம். சிறிவர்தன, தொழில் அமைச்சின் செயலாளர் எம்.பி. டி.யு.கே மாபா பத்திரன, திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆர்.எம்.பி. ரத்நாயக்க மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர்.எச். டபிள்யூ.ஏ.குமாரசிறி ஆகியோரும் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.



# ‘விடுதலைக்கான போராட்டம்’ நடைபவனி கண்டியில் ஆரம்பம்









கொழும்பு, ஏப். 27

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும் அரசுக்கு எதிரான எதிர்ப்பு பேரணி நேற்று முற்பகல் கண்டி நகரத்தில் தொடங்கியது. ‘விடுதலைக்கான போராட்டம்’ என்ற இந்த நடைபவனி கண்டி பொது சந்தை பகுதியில் இருந்து ஆரம்பித்து மாவனல்ல திசையை நோக்கி நகர்ந்தது. பல்லாயிரக் கணக்கான கட்சித் தொண்டர்களும் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்கா ரர்களும் இந்த நடை பவனியில் பங்குபெறுகின்றனர். இந்த நடைபவனி மே முதலாம் திகதி கொழும்பை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கண்டியில் இருந்து புறப்பட்ட நடைபவனி மாவனல்ல, கலிகமுவ, தங்கோ விட்ட, யக்கல, பேலியகொடை வழியாக கொழும்பு சுதந்திர சதுக்கத்தை வந்தடையும்.

## ஒரு லட்சம் டொலர்களை வைப்பிலிடும் வெளிநாட்டவர்களுக்கு வதிவிட வீசா!

### வழங்க அமைச்சரவை அனுமதி

மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியில் குறைந்தபட்சம் ஒரு லட்சம் டொலர்களை வைப்பிலிடும் வெளிநாட்டவர்களுக்கு, வதிவிட வீசா வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய 10 ஆண்டுகளுக்கு வதிவிட வீசா வழங்கும் கோல்டன் பாரடைஸ் விசா திட்டம் என்ற திட்டத்தை செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட நீண்டகால வதிவிட வீசா வழங்குதல் தொடர்பாக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி,

கூட்டு ஆதனங்களின் பெறுமதி குறைந்தபட்சம் 75 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு மேலதிகமாக முதலீடு செய்கின்ற வெளிநாட்டவர்களுக்கு மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளின் இயக்குநர்களுக்கு, அவர்களுடைய துணைவருக்கும் தங்கி வாழ்பவர்களுக்கும் அவ்வாறு முதலிடுகின்ற அமெரிக்க டொலரின் அளவுக்கமைய 5 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான நீண்டகால வதிவிட வீசா வழங்கல்.

இலங்கை மத்திய வங்கியால் அங்கீகாரமளிக்கப்பட்ட வணிக வங்கியொன்றில் குறைந்தது ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை வைப்பிலிடும் வெளிநாட்டவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கான வதிவிட வீசா வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் தங்க சுவர்க்க வீசா நிகழ்ச்சித்திட்டம் எனும் பெயரிலான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

ஆகிய யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## தந்தையின் 45 ஆம் ஆண்டு நிகழ்வுகள் யாழில் நடந்தன!



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 45 ஆவது நினைவு தினம் நேற்று (செவ்வாய்க்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில், நேற்று செவ்வாய்க்கிழமை ஓய்வுநிலை ஆயரும் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு தலைவருமான கலாநிதி சு.ஜெபநேசனின் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செய்யப்பட்டது. அஞ்சலி நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சிவில் சமூக உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
### திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வெளிவாரிப் பரீட்சைகள்

வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)

* **முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2020 (பழைய பாடத்திட்டம் - மீள்பரீட்சார்த்திகளுக்கானது)**
* **முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2020 (புதிய பாடத்திட்டம்)**

மேற்படி பரீட்சைகளினை 21.05.2022 (சனிக்கிழமை) தொடக்கம் 05.06.2022 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணை, பரீட்சை அனுமதி அட்டையினை 13.05.2022 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 20.05.2022 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**26.04.2022**


### முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல்:

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 10 பேர் விடுதலை!

மட்டக்களப்பு கிரான் பகுதியில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 10 பேரையும் சட்டமா அதிபரின் ஆலாசனையின் பிரகாரம் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் திங்கட்கிழமை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

வடக்கு கிழக்கு முன்னேற்றகழக தலைவர் வி.லவக்குமார் தலைமையில் கடந்த மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தலை நினைவு கூர்ந்து கிரான் கடற்கரையில் சுடர் ஏற்றி நினைவு கூர்ந்தனர்.

இந்நினைவேந்தலை நினைவு கூர்ந்த வடக்கு கிழக்கு முன்னேற்ற கழக தலைவர் வி.லவக்குமார் உட்பட 10 பேரை கல்குடா பொலிஸார் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் கடந்த டிசெம்பர் 8 ஆம் திகதி 10 பேரையும் அவர்களை தொடர்ந்து வாழைச்சேனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் பிணையில் விடுவித்தார்.

குறித்த 10 பேருக்குமான வழக்கு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் இவர்கள் அனைவரையும் நீதிவான் இந்த வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கோரிக்கையை வலிமைப்படுத்த...!

ஆட்சியாளர்களுக்கு – அதிகார பீடத்தினருக்கு – எதிராகத் தற்போது வெடித்துள்ள அழுத்தம் அல்லது நெருக்குவாரம் அரசியல்வாதிகளால் ஏற்பட்டதல்ல.

அரசுக்குள் குசும்பு பண்ணிக் கொண்டிருந்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது அமைச்சரவையிலிருந்து தூக்கிக் கடாசிய சொற்ப காலத்தில் இந்த அரசியல் களேபரம் வெடித்தது என்பது ஏதோ உண்மைதான்.

தாம் பதவியிலிருந்து துரத்தப்பட்டதும் இந்த ஜனாதிபதியையும் அவரது அரசையும் என்ன பண்ணுகிறோம் பாருங்கள் என்று விமல் வீரவன்ஸ அணி ஆரவாரம் பண்ணியதும் வாஸ்தவம்தான்.

ஆனால், அந்த அரசியல்வாதிகளோ, பிற எதிர்க்கட்சியினரே செய்த புரட்சியினால் இந்த நெருக்கடி அரசுக்கு வந்து விடவில்லை.

‘குருவி இருக்கப் பனம் பழம் விழுந்த கதையாக’ விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார குழுவினரை அரசிலிருந்து அகற்றிய சொற்ப காலத்தில் கோட்டா அரசுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி வெடித்து விட்டது.

பொருளாதார ரீதியில் அரசு அடக்கி, மூடி வைத்திருந்த விடயங்கள் சுயரூபம் எடுத்து வெளிப்பட்ட போது அவற்றின் நேரடிப் பாதிப்புகளை எதிர்கொண்ட மக்களை, ஏற்கனவே அதிருப்திக்குள்ளாக்கியிருந்த விடயங்களும் சேர்ந்து ஒரேடியாகக் குழப்பி விட்டன. அவ்வளவுதான்.

ஏதோ இந்த அரசுத் தலைமைக்கு – ஆட்சிப் பீடத்துக்கு – எதிராக சில அரசியல்வாதிகள் பண்ணிய புரட்சியினால் இன்றைய நெருக்கடி நிலை அதிகாரத் தரப்புக்கு வந்திருப்பதாகத் தம்பட்டம் அடிப்பது சுத்த அபத்தம்.

மக்கள் எழுச்சி தன்னார்வமாக எழுந்தது. அதனை அரசியல் கலப்பின்றி அவர்கள் முன்னெடுக்க விரும்புகின்றார்கள். அதைத்தான் காலிமுகத் திடல் போராட்டக் களத்தில் நாம் தினசரி தரிசிக்கின்றோம்.

எனினும், அந்தப் போராட்டக்காரர்களின் குரல் இன்னும் ஒருமித்ததாக – ஓங்கி ஒலிப்பதாக – வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குத் துரத்தும் அவர்களின் கோரிக்கை வெளிப்படையானது. தெளிவானது. அப்பட்டமானது.

ஆனால், அதற்காக வெறுமனே காலிமுகத்திடலில் நாள்கணக்கில் கூடி ஆர்ப்பாட்டம் செய்வதுடன் விடயம் ஒப்பேறி விடுமா? அதற்கு அப்பாலும் பல விவகாரங்களில் அவர்கள் காய் நகர்த்த வேண்டும்.

அவற்றில் ஒன்று ‘கோட்டா கோ ஹோம்’ என்ற தங்களின் கோரிக்கையை நாடாளுமன்றத்திலும் ஒலிக்க வைத்து அதனை மக்கள் பிரதிநிதிகளின் ஏக கோரிக்கையாக நிறைவேற்றச் செய்வதாகும்.

நமது நாடாளுமன்ற அரசியல்வாதிகள் தமது அரசியலுக்காக நம்பிக்கையில்லாப் பிரேரணை, இடைக்கால அரசு, மாற்று அரசு, காபந்து அரசு என்று பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதை விடுத்து, கோட்டாவை வீட்டுக்குச் செல்லும்படி வற்புறுத்தும் பிரேரணை ஒன்றை மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு நிறைவேற்றினால் – அதற்கு சட்ட ரீதியான வலிமை இல்லாவிட்டாலும் – அது மக்கள் பிரதிநிதிகளின் தார்மீக ரீதியான தீர்ப்பு என்று அதற்கு ஒரு சமூக அங்கீகாரம் கிட்டும். காலி முகத் திடல் போராட்டக்காரர்களின் கோரிக்கையும் வலிமை பெறும்.

அது மட்டுமல்ல, அத்தகைய பிரேரணை நாடாளுமன்றுக்கு வரும் போது காலி முகத் திடல் போராட்ட சக்திகளுடன் சமாந்தரமாகப் பயணிக்கும் எம்.பிக்கள் யார், எதிர்த்து நடைபோடுபவர்கள் யார், மதில் மேல் பூனை போல நடிப்பவர்கள் யார் என்பதையும் அடையாளம் காண முடியும்.

# 30 இற்குள் ஜனாதிபதி பதவி விலகாவிடின் பாரிய மக்கள் போராட்டம் வெடிக்குமாம்!

### எச்சரிக்கிறார் மனுஷ நாணயக்கார



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் பதவி விலகா விட்டால், பாரிய மக்கள் அலையை கொழும்பில் திரட்டி மிகப்பெரும் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றன.

எனினும் அவர் ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறாமல் பலத்த பாதுகாப்புடன் உள்ளார். இது வெட்கப்பட வேண்டியதொரு விடயமாகும்.

மக்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் கண்டியிலிருந்து கொழும்பிற்கான பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தலதா மாளிகையில் ஆசீர்வாதம் பெற்ற பின்னர் அங்கிருந்து பேரணி ஆரம்பமாகும்.

26 ஆம் திகதி கண்டியிலிருந்து மாவனெல்ல வரையும், 27ஆம் திகதி மாவனெல்லையிலிருந்து கலிகமுவ வரையும், 28 ஆம் திகதி கலிகமுவையிலிருந்து தனோவிட வரையும், 29 ஆம் திகதி தனோவிடவிலிருந்து யக்கலவரையும், 30 ஆம் திகதி யக்கலையிலிருந்து பேலியகொட வரையும் பேரணி இடம்பெறவுள்ளது.

பேரணி நிறைவடைந்த மறுநாள் மே மாதம் முதலாம் திகதி கொழும்பில் பாரிய மக்கள் கூட்டம் இடம்பெறும். அதற்கமைய எமது பேரணி நிறைவடையும் நாள் வரை ஜனாதிபதிக்கு கால அவகாசத்தை வழங்குகின்றோம்.

ஏப்ரல் 30 ஆம் திகதியும் ஜனாதிபதி பதவி விலகாவிட்டால் முதலாம் திகதி பாரிய மக்கள் வெள்ளத்தை திரட்டி கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்போம். – என் றார்.

# அடுத்தவாரம் முதல் நாம் போக்குவரத்தில் ஈடுபடோம்!

### தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்

பஸ்களுக்கு தேவையான உதிரிப்பாகங்களுக்கு தட்டுப்பாடு இடம்பெற்று வருவதால் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அதனால் இந்த பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வைப் பெற்றுத்தராவிட்டால் பயணிகள் போக்குரவத்து சேவையில் இருந்து அடுத்த வாரம் முதல் ஒதுங்கிக் கொள்வோம் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ண தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

பஸ்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் இல்லாமை காரணமாக பயணிகள் போக்குவரத்து சேவை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள் அடிக்கடி பழுதுபார்க்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான நிலையில் தேவையான உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது.

அதனால் குறித்த பஸ், பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்த முடியாது.

குறிப்பாக பஸ்களுக்குத் தேவையான டயர்,பெற்றரி, பிரேக் லைனர் உட்பட பல உதிரிப்பாகங்கள் இல்லாமை காரணமாக பல பஸ்கள் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்த முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

எனவே இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தவறி விட்டால், அடுத்த வாரம் முதல் அனைத்து தனியார் பஸ்களும் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். – என்றார்.

# வர்த்தகர்கள், உணவக உரிமையாளர்கள் மனச்சாட்சியுடன் நடந்துகொள்ள வேண்டும்

### தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை கோரிக்கை

தேநீர் மற்றும் வடை போன்றவற்றை உண்பதற்கே அதிக பணங்களை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் வர்த்தகர்கள், உணவக உரிமையாளர்கள் மனச்சாட்சியுடன் நடக்க வேண்டும் என தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் நிஷாந்தன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே நிஷாந்தன் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

பொருளாதார நெருக்கடி என்பது நாடு முழுவதும் உள்ள மக்களை பாதித்தாலும் அதிக அளவில் தென்னிலங்கையையே பாதிக்கின்றது. வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை கடந்த 30 வருடங்களாக தமிழ் மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பது யதார்த்தமான உண்மை. இன்றுதான் தென்னிலங்கை மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளார்கள்.

யுத்தம் மௌனிக்கப்பட்டு 13 வருடங்கள் கடந்த பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமைகளால் மக்கள் சரியான துன்பத்தை அனுபவித்து வருகின்றார்கள். குறிப்பாக வடக்கு கிழக்கில் இது அதிக தாக்கத்தைச் செலுத்தி வருகின்றது.

பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் கட்சிகளும் அரசியல் பிரதிநிதிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெரிய அளவில் கவனத்தில் கொள்ளவில்லை என்பது கவலையான விடயம்.

குறிப்பாக உணவு விற்பனை நிலையங்களை எடுத்துக் கொண்டால் ஒரு தேநீர் மற்றும் வடை போன்றவற்றை உண்பதற்கே அதிக பணங்களைச் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் வர்த்தகர்கள், உணவக உரிமையாளர்கள் மனச்சாட்சியுடன் நடக்க வேண்டும். தற்போது அதிகளவான இலாபத்திற்கு உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

மனச்சாட்சிக்கு விரோதமாக உணவக உரிமையாளர் செயற்படுகின்றார்கள். இதனை நாம் குறை கூறவில்லை ஆனால் திருத்திக்கொள்ள வேண்டும்.

சாதாரணமாக வடைக்கும் பரோட்டாவுக்குமான விலை என்பது 300 – 400 வரைபோவது உண்மையில்ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். – என்றார்.

# மேலதிக ஆலோசனைகளை வழங்குக! பாதங்களை வணங்கிக் கேட்கின்றேன்

## 4 மகா சங்கத்தினருக்கு ஜனாதிபதியின் பதில் கடிதம்



நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் அறியாதவனாக நான் இல்லை. எனவே தான் நிபுணர்கள் குழுவூடாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றேன்.

எனவே இந்த முன்னெடுப்புக்களில் வெற்றி இலக்கை அடைவதற்கு சிறு காலம் செல்லும் என்பதோடு, இதற்கு தங்களின் மேலதிக ஆலோசனைகளை பாதங்களை வணங்கி கேட்டு நிற்கின்றேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நான்கு மகா சங்கத்தினரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

தம்மால் கடந்த 4 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்துக்கு எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து , மகா சங்கத்தினரால் கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு பிறிதொரு கடிதம் அனுப்பப்பட்டது.

அந்தக் கடிதத்துக்கு ஜனாதிபதியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பதில் கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்த 4 ஆம் திகதி உங்களால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ள காரணிகளை நாம் ஒருபோதும் உதாசீனப்படுத்தவில்லை.

உங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை நான் அறியாமல் இல்லை.

நாளாந்த தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில், விசேட நிபுணர்களின் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றேன்.

அதற்கமைய மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவு, மருந்து, சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் உள்ளிட்டவற்றை வழங்குவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள தயார்ப்படுத்தல்கள் தற்போதும் தீவிர கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய புதிய நிதி அமைச்சர், மத்திய வங்கி ஆளுநர், திறைசேரி செயலாளர் ஆகியோர் சர்வதேச நாணய நிதியத்துடனும் பேச்சுகளை முன்னெடுத்துள்ளனர். அதற்கமைய சர்வதேச நாணய நிதியம் மற்றும் இந்தியாவிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதன் ஊடாக நாட்டில் நிலவும் நெருக்கடிகளுக்கு எதிர்வரும் சில வாரங்களுக்குள் தற்காலிக தீர்வைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று நம்புகின்றோம்.

நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடனேயே புதிய அரசமைப்பு தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் 9 பேரடங்கிய குழுவை நியமித்தேன். இந்தக் குழு கடந்த இரண்டு காலமாக வெவ்வேறு அரசியல் கட்சிகள், விசேட நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களுடன் கலந்துரையாடி புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இந்த குழுவின் வரைவு கிடைக்கப் பெற்றவுடனேயே அதனை அமைச்சரவையிலும் பின்னர் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். அதே போன்று அதன் பிரதியொன்றும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஜனாதிபதி என்ற ரீதியில் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு நான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். நீங்கள் குறிப்பிட்டுள்ளதைப் போன்று 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்குவது தொடர்பில் நாடாளுமன்றத்தால் ஏதேனும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின் அதற்கு எனது ஒத்துழைப்புக்களை வழங்குவேன் என்பதோடு, அவ்வாறான திருத்தத்தை ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றம் இணைந்து கொண்டு வர வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாட்டிலுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காக சர்வகட்சி மாநாட்டுக்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்கும், அமைச்சு பதவிகளை ஏற்பதற்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்கும் இதுவரையிலும் சாதகமான பதில் கிடைக்கப் பெறாமை கவலையளிக்கிறது. எவ்வாறிருப்பினும் அனைத்து கட்சிகளுக்குமான எனது அழைப்பைத் தொடர்ந்தும் விடுக்கின்றேன். நாம் எதனை செய்தாலும் அது அரசமைப்பிற்கமைய இடம்பெற வேண்டும் என்பதோடு , மக்களின் அபிலாஷைகளும் தற்போதைய அரசமைப்பின் ஊடாகவே நிறைவேற்றப்பட வேண்டும்.

எனவே, நானோ அல்லது எமது அரசாங்கமோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உங்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை உதாசீனப்படுத்தவில்லை. அமைச்சரவை இன்றி நாட்டை நிர்வகிக்க முடியாது. அதேபோன்று அமைச்சரவை என்ற ஒன்று இல்லாமலிருப்பது நடைமுறை சாத்தியமற்றது.

அதற்கமையவே சிரேஷ்ட அமைச்சர்களின் ஒத்துழைப்புடன், இளம் உறுப்பினர்கள் பெருமளவானோரை உள்ளடக்கிய அமைச்சரவையை நியமிப்பதற்கு என்னால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மக்களின் பிரச்சினைகளுக்கு துரித தீர்வைக் காண்பதற்காக குறுகிய காலத்திற்கே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது இரண்டரை வருட ஆட்சிக் காலத்தில் எந்தவொரு சிவில் ஆர்ப்பாட்டங்களிலும் கண்ணீர் புகை பிரயோகமோ அல்லது நீர்த்தாரை பிரயோகமோ மேற்கொண்டு அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதே போன்று எனது செயலக வளாகத்தில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த 19 ஆம் திகதி மக்கள் ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற சம்பவத்திற்கு எனது கவலையை தெரிவித்துக் கொள்வதோடு, அது தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்குமாறும் ஆலோசனை வழங்கியுள்ளேன். அந்த விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் அது தொடர்பான அறிக்கையையும் உங்களிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

உங்களால் குறிப்பிடப்பட்டதைப் போன்று நாட்டின் தற்போதைய நெருக்கடிகளுக்கு ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக் கூற வேண்டும் என்ற போதிலும் , அவற்றுக்கு தற்காலிக மற்றும் நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவற்றின் மூலம் சிறந்த பிரதிபலனைப் பெற்றுக் கொள்வதற்கு குறிப்பிட்ட கால அவகாசத்தை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அனைத்து அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு , நெருக்கடியான அரசியல் சூழலை சுமுகமாக்குவதற்கும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் உங்களது ஆலோசனைகளையும் தலையீட்டையும் வழங்க வேண்டும் என்று பாதங்களை வணங்கி கோருகின்றேன். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 21 விமான கொள்முதல் ஒப்பந்தத்தை மூன்று மாதங்களுக்குப் பிற்போடுங்கள்

## சரித ஹேரத் கோரிக்கை

ஸ்ரீலங்கன் எயார்லைன் நிறுவனத்திற்கு 2022 – 2025ஆம் காலப்பகுதிகளுக்குத் தேவையான 21விமானங்களை ஒப்பந்த அடிப்படையில் கொள்முதல் செய்யும் யோசனையை மூன்று மாதங்களுக்கு பிற்போடுமாறு அரசாங்க பொறுப்பு மற்றும் முயற்சிகள் தொடர்பான குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன் நிறுவனத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் கொள்முதல் செய்வது தொடர்பில் விளக்கப்படுத்தலுக்காக எயார்லைன் நிறுவனம் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் உள்ள கோப் குழுவில் முன்னிலையானது.

தற்போதைய பொருளாதார நிலைமையின் கீழ் குறித்த யோசனையை மறுபரிசீலனை செய்யுமாறும் சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கொள்முதல் வழிகாட்டலை உரிய முறையில் தயாரித்தல் மற்றும் தொடர்புடைய கொள்முதல் செயல்முறையை அமைச்சின் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அதனை அமைச்சரவை தீர்மானமாக முன்னெடுக்குமாறும் கோப் குழுவின் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

விமானங்களின் சேவைக் காலம் நிறைவடைந்ததும் அவற்றுக்காக விமானங்களை மாற்றீடு செய்தல் விமான சேவையைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அவசியமான நடைமுறை என்பதை ஏற்றுக்கொள்ள முடியும்.

இருப்பினும் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு ஏனைய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குவது அவசியம் எனவும் கோப்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான சேவையில் தற்போது சேவையில் உள்ள 24 விமானங்களின் எண்ணிக்கை இன்னும் சில காலத்துடன் வரையறுக்கப்படும்.

விமானங்களை உடனடியாக பெற்றுக்கொள்ள முடியாது.அதற்கு சிறிது காலம் தேவைப்படும் என்பதால் அதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து விளம்பரங்களை பிரசுரித்ததாக ஸ்ரீலங்கன் எயார்லைன் நிறுவனத்தின் தலைவர் அசோக பத்திரகே கோப் குழுவில் குறிப்பிட்டார்.

அத்துடன் சந்தை நிலைவரங்களைக் கருத்திற்கொண்டு இந்த செயன்முறையை முன்னெடுக்க 6 தொடக்கம் 12 மாதம் வரையிலான காலம் தேவைப்படும் அத்துடன் இந்தக் கொள்முதல் அமைச்சின் ஊடாக வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மொட்டுவின் இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் பல்வேறுபட்ட துறைகளில் ஒத்துழைப்புகள் தொடர்பாக நட்பு ரீதியாகவும் வெளிப்படையாகவும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது எனவும், இலங்கைக்கான சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை சீனத் தூதுவர் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார் எனவும் இலங்கைக்கான சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சமையல் எரிவாயு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 2,185 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 4,860 ரூபாவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

ஏனைய கொள்ளளவுடைய எரிவாயு சிலிண்டர்களின் விலை களும் இதே விகிதாசாரத்துக்கு அமைய உயர்த்தப்பட்டுள்ளன. 5 கிலோ கிராம் சிலிண்டர் ஒன்றின் விலை 1,945 ரூபாவாகவும் 2.3 கிலோ கிராம் சிலிண்டர் ஒன்றின் விலை 910 ரூபாவாகவும் உயர்வடைந்துள்ளது.

முன்னதாக ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் லிட்ரோ நிறுவனம் நாளாந்தம் 25 கோடி ரூபா நட்டம் அடைவ தாகவும், எனவே 12.5 கிலோ கிராம் எடையுடைய சமை யல் எரிவாயு சிலிண்டரின் விலையை 5,175 ரூபாவிற்கு அதிகரிக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் லிட்ரோ நிறுவனம் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கான விலையை அதிகரித்திருந்த போதிலும் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படாது என அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ராஜபக்ஷவினர் எமது வம்சாவளி!

## காமாட்சி நாயுடு தெரிவிப்பு



இலங்கையில் நாயக்க என்ற குடும்ப பெயர்களை கொண்டுள்ளவர்கள், தெலுங்கு நாயுடு வம்சாவளியினர் எனவும் ராஜபக்ஷவினரும் தெலுங்கு வம்சாவளியை சேர்ந்தவர்கள் எனவும் தமிழ் நாடு நாயுடு பேரவையின் தலைவர் காமாட்சி நாயுடு தெரிவித்துள்ளார்.

தமிழ் வலையொளித் தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

பண்டாரநாயக்க என்ற பெயரில் இருக்கும் பண்டார என்பது தமிழில் இருக்கும் பண்டாரம் என்ற பெயர்களை கொண்ட மக்களைக் குறிக்கும். பண்டாரம் என்பவர் அம்மன் கோயில் ஒன்றில் பூசாரியாக இருந்தார். அவரது பெண்ணை இலங்கைக்கு மணம் முடித்துக் கொடுத்தனர்.

இலங்கை சென்றது, இந்தப் பெண்ணின் கணவன் இறந்து போகிறார். இதன் பின்னர், அந்த பெண் இலங்கையில் வாழ்ந்து வருகிறார். அதன் பின்னர், அங்கு ஆட்சி செய்த நாயக்கர்களான நாயுடுகளில் ஒருவரைத் திருமணம் செய்த பின்னர் பண்டாரநாயக்க என்று குடும்ப பெயர் மா றுகிறது. இலங்கையில் 1793 ஆம் ஆண்டில் எங்களது (தெலுங்கர்களின்) ஆட்சி உதயமாகின்றது. அன்றிலிருந்து இலங்கையில் நாயக்கர்களில் ஆட்சி ஆரம்பமாகிறது. எனினும் அதற்கு முன்னரே பண்டாரம் என்ற வார்த்தை இலங்கைக்கு சென்று விட்டது. பண்டாரம் என்ற குடியிலேயே திருவள்ளுவர் பிறந்தார் எனக் கூறுகின்றனர். அது உண்மையாகவும் இருக்கலாம். ஏன் என்றால், அவர்கள் மிகவும் திறமையானவர்கள். பட்டியலின வகுப்புகளில் இவர்கள் சற்று மாறு பட்டவர்கள். இவர்கள் ஜாதகம் பார்ப்பது கோயில்களில் பூசாரிகளாக பணியாற்றுகின்றனர். பழனியில் இருக்கும் பூசாரிகள் அனைவரும் பண்டாரம் என்ற பிரிவை சேர்ந்தவர்கள். இவர்களில் வம்சாவளியில் வந்தவர்களே பண்டாரநாயக்கர்கள். சிங்க(ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்) என்ற கண்டி மன்னர் தமிழகத்தின் மதுரை நாட்டில் இருந்து இரண்டு நாயுடு பெண்களை மணம் முடித்துக்கொள்கிறார். அந்த இரண்டு பெண்களுக்கும் வாரிசுகள் இல்லை.

இதன் பின்னர் 1793 ஆம் ஆண்டில் மதுவரையில் இருந்த இந்த பெண்களின் சகோதரனை(ஸ்ரீ விஜய ராஜசிங்கன் ) கண்டிக்கு அழைத்துச் சென்று மன்னராக முடி சூடுகின்றனர்.

அதன் பின்னர் அங்கு நாயுடுக்களின் ஆட்சி ஏற்படுகிறது. சிங்களவர்கள் அனைவருமே நாயுடுகள். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. ராஜபக்ஷவினரின் வம்சாவளியினரும் நூற்றுக்கு நூறு நாயுடுகளே.

இலங்கையில் இருக்கும் ராஜபக்ஷவினரும், இந்தியாவில் இருக்கும் நாயுடுகளின் வம்சாவளிகள் ஒரே இனத்தவர்களே. அவர்கள் நாயுடுகள் என்பதற்காக அவர்கள் செய்வது அனைத்தையும் நியாயப்படுத்தவில்லை.

அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட குற்றங்கள் முற்றிலும் தவறானவை. அதனை நான் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் காமாட்சி நாயுடு தெரிவித்துள்ளார்.

தமிழ் நாடு நாயுடு பேரவையின் தலைவர் காமாட்சி நாயுடு, தெலுங்கர் முன்னேற்ற கழகம் என்ற அரசியல் கட்சியை நடத்தி வந்தார். அதனை பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைத்து அந்தக் கட்சியில் இணைந்து செயற்பட்டு வருகிறார். தெலுங்கர் முன்னேற்றக் கழகம் கட்சியை ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைத்தீர்கள் என அண்மையில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்திருந்த காமாட்சி நாடு, திராவிட முன்னேற்றக் கழகம் இருப்பதால், தெலுங்கர் முன்னேற்றக் கழகம் என்ற கட்சி தேவை இல்லை எனக் கருதி,அதனை தி.மு.கவுடன் இணைத்தார் எனவும் தற்போது தமிழகத்தில் ஆட்சியில் இருப்பது தமது ஆள் என்பதால், தனியாக கட்சியை வைத்திருக்கும் அவசியமில்லை எனவும் கூறியிருந்தார்.

இலங்கையின் கண்டி ராஜ்ஜியத்தின் இறுதி சிங்கள மன்னனான ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கனின் மறைவுக்குப் பின்னர், கண்டியை மதுரையை சேர்ந்த நாயக்கர் வம்சத்தை சேர்ந்த நான்கு மன்னர்கள் ஆட்சி செய்தனர். 1739ஆம் ஆண்டு முதல் 1747 ஆம் ஆண்டு வரை ஸ்ரீ விஜய ராஜசிங்கனும், 1747 ஆம் ஆண்டு முதல் 1782ஆம் ஆண்டு வரை கீர்த்தி ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனும் 1782 ஆம் ஆண்டு முதல் 1798 ஆம் ஆண்டு முதல் ராஜாதி ராஜசிங்கனும் 1798 ஆம் ஆண்டு முதல்1815 ஆம் ஆண்டு வரை ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனும் கண்டியை ஆட்சி செய்தனர். 1815ஆம்ஆண்டுகண்டிராஜ்ஜியத்தை பிரித்தானியர் கைப்பற்றினர். – என்றார்.

# தமக்கும் ராஜபக்ஷர்களுக்கும் எந்தத் தொடர்புகளும் இல்லை!

## உகண்டா நிறுவனம் அறிவிப்பு

இலங்கையின் ராஜபக்ஷ குடும்பத்தினரிடம் இருந்தோ அல்லது அந்த நாட்டின் அரசியல்வாதிகளிடம் இருந்தோ, முதலீடுகள் எதனையும் பெறவில்லை என்று உகண் டாவின் செரினிட்டி குழுமம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் செரினிட்டி குழுமம், ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டது, அதன் நிறுவுநர்கள், செயற்பாடுகள் மற்றும் வணிக விவரங்கள் தொடர்பாகச் சமூக ஊடகங்களில் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இதில் குழுமம் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்தநிலையில் இலங்கையின் ராஜபக்ஷ குடும்பத்துடன் தமது நிறுவனத்தின் வணிக முயற்சியை இணைக்கும் கருத்துப்பகிர்வுகளை அடுத்து, இலங்கையின் பொது மக்களிடையே தவறான கருத்துக்கள் தோன்றியுள்ளன. எனவே இந்தக் கருத்துக்களில் இருந்து தமது பெயரை நீக்குவதற்கு செரினிட்டி குழுமம், சட்ட ஆலோசனையை நாடியுள்ளது.

உகண்டாவில் உள்ள செரினிட்டி குழுமத்தின் நிறுவனங்களில் இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 1000 கோடி அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளதாக சமூக ஊடகங்களில் பகிர்வுகள் இடப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் பல இலங்கையர்கள் மற்றும் உகண்டா நாட்டவர்களுக்கு தமது நிறுவனம் வேலைவாய்ப்பை வழங்கியது. அத்துடன் நாட்டுக்கு நிலையான வெளிநாட்டு பணம் அனுப்புவதன் மூலம் தமது நிறுவனம் பெருமையுடன் தொடர்ந்து இலங்கைக்கு ஆதரவளிக்கும் என்றும் செரினிட்டி குழுமம் ஊடகங்களுக்கு அளித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பணிப்பாளர்களான ருவன் ஜயரத்ன மற்றும் தேவக ஏகநாயக்க ஆகியோரின் வர்த்தக ஆர்வத்தின் அடிப்படையில் செரனிட்டி குழுமம் – உகண்டாவில் ஸ்தாபிக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உகண்டாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தின்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நிறுவனத்துக்கு சென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை மருந்துகளின் விலைகளில் திருத்தம்

## அமைச்சர் சன்ன ஜயசுமன அறிவிப்பு

*இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை மருந்துகளின் விலைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன அறிவித்துள்ளார்.*

*இந்தச் சந்தர்ப்பங்களில் காணப்படும் டொலரொன்றின் பெறுமதிக்கமைய இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-*

*மருந்துகளின் விலைகளை அதிகரிக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு நாம் ஒரு போதும் இணங்குவதில்லை.*

*டொலரொன்றின் பெறுமதிக்கு நிகராக விலைகளைத் திருத்தியமைத்து, நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளைத் தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.*

# அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் முகமாலை பகுதிக்கு விஜயம் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை பார்வையிட்டார்





யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க தூதுவர் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 7.45 மணியளவில் முகமாலை பகுதிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். அமெரிக்க கொடையாளர்களின் நிதி உதவியில் முகமாலை பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை நேரில் பார்வையிட்டுள்ளார்.

டாஸ் நிறுவனத்தால் குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவருக்கு மனிதநேய பணி தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து அந்தப்பகுதியில் மேற்கொள்ளப்படுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன், கள ஆய்வையும் மேற்கொண்டு அங்கு கடமையில் ஈடுபட்டுள்ள மனிதநேய கண்ணிவெடி அகற்றம் பணியாளர்களுடன் கலந்துரையாடியிருந்தார். தொடர்ந்து குறித்த பகுதியில் அகற்றப்பட்ட ஆபத்துமிக்க வெடி பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டு தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்தும் குறித்த பகுதியில் கண்ணிவெடிகள் காணப்படுகின்றமை தொடர்பிலும், அவற்றை அகற்ற வேண்டிய தேவைகள் தொடர்பிலும் அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்து கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டாஸ் நிறுவனத்தின் பணியாளர்களுடன் புகைப்படம் எடுக்கப்பட்டது. இந்த விஜயத்தின்போது அமெரிக்க தூதரக அதிகாரிகள், டாஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்போது மனிதநேயம் மிக்க பணியை முன்னெடுத்துவரும் ஊழியர்களைத் தூதுவர் பாராட்டியதுடன். தொடர்ந்தும் பணிகளை முன்னெடுக்கு மாறும் அவர் கூறியிருந்தார். அங்கு பணிபுரியும் பெண்களுடன் தனியாக புகைப்படம் ஒன்றையும் அவர் பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கட்சித் தலைவர் கூட்டத்தை உடன் கூட்ட ஏற்பாடு செய்க!

## சபாநாயகருக்கு சஜித் கடிதம்



நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 21 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக கட்சித் தலைவர் கூட்டத்தை உடனடியாக கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு, இந்தக் கட்சித் தலைவர் கூட்டத்துக்கு சட்டமா அதிபர் உள்ளிட்ட சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைவு திணைக்கள அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கோரியுள்ளார்.

இதுதொடர்பாகஎதிர்க்கட்சிதலைவர்சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

நாட்டில் தற்போது தலைதூக்கியுள்ள சவால்மிக்க நிலைமைக்கு அரசமைப்பு நேரடியாகத் தலையிட வேண்டியது அவசியம் என நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

தற்போதைய நிலையில், நாடாளுமன்றத்தில் எடுக்கும் முடிவுகள் தொடர்பாக முழு நாட்டு மக்களும் அவதானத்துடன் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

மக்கள் கோரும் பிரதான மறுசீரமைப்புக்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது முக்கியமானது.

அத்தோடு, நாட்டினுள் சிறந்த ஆட்சி மற்றும் வெளிப்படையானத் தீர்மானங்கள் தொடர்பாக அரசமைப்பு மாற்றம் அத்தியாவசியமானதாகும்.

எனவே, அதற்காக தற்போது உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள 21 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக கட்சித் தலைவர் கூட்டத்தை உடனடியாக கூட்டுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்தோடு, இந்தக் கூட்டத்துக்கு சட்டமா அதிபர், அந்தத் திணைக்களத்தின் முக்கிய அதிகாரிகள் மற்றும் சட்ட வரைவு திணைக்களத்தின் அதிகாரிகளையும் அழைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நடவடிக்கைகளை மேலும் காலம் தாழ்த்துவதற்கோ அல்லது பேச்சு நடத்திக்கொண்டிருப்பதற்கான காலம் இல்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எங்களுடைய நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் அவதானத்துடன் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

மகாநாயக்க தேரர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், தொழில்முனைவோர்களான புதிய தலைமுறை இளைஞர், யுவதிகள் என முழு நாட்டு மக்களும் நாட்டுக்காக உடனடியாக எடுக்க வேண்டிய தீர்வுகள் தொடர்பாக நாடாளுமன்றம் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றனர்.

எனவே, தற்போது நீங்கள் எடுக்கும் தீர்மானங்களே எதிர்காலத்தை தீர்மானிக்கும் என்பதை சுட்டிக்காட்டுகின்றோம்.

இந்தக் கோரிக்கைக்கு விரைவில் பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த புதிய உபகரணங்கள் வழங்கல்

நாடு தழுவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

போராட்டம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டமை தொடர்பான படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

கண்ணீர்புகையில் இருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு புதிய ஹெல்மெட், தடியடி நடத்தும் தடி, கண்ணீர்ப் புகை மற்றும் முகக்கவசங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொலிஸ் அதிகாரிகள் புதிய உபகரணங்களின் அட்டைகளை அகற்றி அவற்றைப் பயன்படுத்துவதைக் காட்டும் படங்களை சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவவிடம் கேள்வி எழுப்பப்பட்டன. இந்தப் புதிய சாதனங்கள் அனைத்தும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்டன என அவர் கூறியுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக பாவனையில் இல்லாத இந்தக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அதற்கமைய, புதிய உபகரணங்கள் எதுவும் இறக்குமதி செய்யப்படவில்லை என்பதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்தப் பொருள்கள் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என பலரும் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சவர்க்காரத்துக்கும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பு

இலங்கையில் அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளவதில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து பெற்றுக்கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை நீடித்து வருகிறது. இந்நிலையில் எரிபொருள், உரம் மற்றும் எரிவாயு வரிசைகளைத் தொடர்ந்து தற்போது ஒரு புதிய வரிசையும் இணைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் நாடு முழுவதும் பல இடங்களில் நீண்ட வரிசையில் சவர்க்காரத்துக்காக மக்கள் காத்திருக்கும் சம்பவங்கள் பதிவாகி உள்ளன.

சிலர் 2 ஆயிரம், 3 ஆயிரம் மற்றும் 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் சவர்க்காரம் கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிந்துள்ளது.

சவர்க்காரங்கள் பாரிய அளவு விலை உயர்வதாக பரவிய செய்தியால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சவர்க்கார வரிசையில் இருப்பவர்கள் சராசரி மக்கள் வாங்கும் சவர்க்காரங்களை விடவும் அதிகமாகக் கொள்வனவு செய்கின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

## வெளிநாட்டில் இருந்து வந்த மனைவியை கொன்றுவிட்டு கிணற்றில் குதித்த கணவன்!

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கண வன் ஒருவர் தனது மனைவியைக் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் மேற்கொண்ட கத்திக்குத்துத் தாக்குதலில் மனைவியின் சகோதரி மற்றும் நண்பியும் காயமடைந்து கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்த சம்பவத்தின் பின்னர் சந்தேக நபரான கணவர் வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த நிலையில் அயலவர்கள் அவரை காப்பாற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் வேபொட – வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த அப்ஸரா கல்பனி என்ற 33 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கணவர் மாத்தறை, கெகனதுர பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய கணவன் மற்றும் மனைவி பட்டதாரிகளாவர்.

அவர்கள் நியூஸிலாந்துக்குச் செல்லத் தயாராகியிருந்த போது கணவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனால் மனைவி மாத்திரம் நியூஸிலாந்து நாட்டுக்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் இருவருக்கும் இடையில் தொடர்ந்து வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதன் காரணமாக இருவரும் விவாகரத்து செய்வதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இவ்வாறான சூழலில் மனைவி நியூஸிலாந்தில் இருந்து நாடு திரும்பியதை அறிந்து கொண்ட கணவர் இரகசியமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டுக்குள் நுழைந்து கொலை செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## எரிபொருளின் விலை திருத்தம் இனி விலைசூத்திரத்தின் கீழ்!

### அமைச்சர் காஞ்சன விஜேசேகர தகவல்

எரிபொருள் விலையில் திருத்தம் எதிர்காலத்தில் விலைச் சூத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

டொலருக்கு நிகரான எரிபொருள் விலையால் அரசாங்கம் தற்போது நட்டத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தார்.

விலை அதிகரிக்கப்பட்ட போதிலும், நிதியமைச்சால் விதிக்கப்படும் வரிகள் நீங்கலாக 92 ஒக்டோன் பெற்றோலால் 13.38 ரூபா நட்டம் ஏற்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் பெற்றோல் 95 ஒக்டோன் பெற்றோலால் 3.28 ரூபா, லங்கா ஓட்டோ டீசலால் 68.79 ரூபா, லங்கா சுப்பர் டீசலால் 67.46 ரூபா மற்றும் மண்ணெண்ணெய்யால் 232.33 ரூபாவும் நட்டம் ஏற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## யாழில் முஸ்லிம்களின் இப்தார் நோன்பு துறப்பு

முஸ்லிம்களின் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு திங்கட்கிழமை மாலை மௌலவி சுபியான் தலைமையில் சர்வமதத்தலைவர்கள் பங்குபற்றுதலுடன் யாழ்.தனியார் விருந்தினர் விடுதியில் சிறப்பாக இடம்பெற்றது.

நபிகள் பெருமானின் ஐந்து தொழுகைகளில் ஒன்றாக விளங்குகின்ற நோன்பிருத்தல் ஏழு வயதுக்கு மேற்பட்ட முஸ்லிம்களால் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்து கொண்டார்.



# 18 ஆவது நாளாகத் தொடரும் காலிமுகத்திடல் தன்னெழுச்சி







கோட்டா வீட்டுக்குப் போ என்ற கோத்துடன் கொழும்பு - காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம் இன்று 18ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

ஜனாதிபதி மற்றும் அரசைப் பதவி விலகுமாறு கோரி முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்தில் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கட்சி, இன, மத, மொழி பேதமின்றி மக்கள் அலையெனத் திரண்டு பங்கேற்று வருகின்றனர்.

இளைஞர் - யுவதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் இந்தப் போராட்டத்தை முன்னின்று நடத்தி வருகின்றனர்.

நேற்றிரவு குறித்த பகுதியில் கூடியிருந்த மக்கள் வெவ்வேறு செயற்பாடுகளின் ஊடாகத் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதனிடையே, அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பொருளாதார நெருக்கடியைக் கண்டித்தும் நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்களை தோண்டியெடுக்க நீதிமன்று அனுமதி

2019 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி சாய்ந்தமருது வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பூதவுடல்கள் இன்று (புதன்கிழமை) தோண்டிஎடுக்கப்படவுள்ளன.

தற்கொலை தாக்குதலில் உயிரிழந்த 17 பேரில் சாரா ஜாஸ்மின் என்கிற புலஸ்தினி மகேந்திரன் உள்ளாரா என்பதை அறியவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சஹ்ரான் ஹாஷிமின் சகோதரர் மொஹமட் ரில்வான் தற்கொலை அங்கியை வெடிக்கச் செய்ததில் குழந்தைகள் உட்பட 17 பேர் உயிரிழந்தனர் எனப் பொலிஸார் அறிவித்தனர்.

இருப்பினும், அந்த நேரத்தில் டி.என்.ஏ. சோதனைகள் சம்பவ இடத்தில் சாரா ஜாஸ்மின் இருப்பதை உறுதிப்படுத்தவில்லை.

முந்தைய இரண்டு முறை மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சாரா ஜாஸ்மினுடைய டி.என்.ஏ ஒத்து போகாததை அடுத்து எச்சங்களை மீண்டும் ஒருமுறை தோண்டி எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயிரிழந்தவர்களின் சடலங்களை இன்று அம்பாறை மயானத்தில் தோண்டி எடுக்க பொலிஸாருக்கு கல்முனை நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

## தங்க சுவர்க்க விசா திட்டம் வழங்குவதில் புதிய பொறிமுறை

### ஜனாதிபதியின் யோசனைக்கு அனுமதி

இலங்கையில் இதற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நீண்டகால வதிவிட விசா வழங்கும் பொறிமுறைக்குப் பதிலாக புதிய முறைமையொன்றுக்கு 2021 மார்ச் மாதம் 7 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பொறிமுறையின் கீழ் குறிப்பிட்ட நீண்டகால வதிவிட விசா வழங்குதல் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கூட்டு ஆதனங்களின் பெறுமதி குறைந்தபட்சம் 75 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு மேலதிகமாக முதலீடு செய்கின்ற வெளிநாட்டவர்களுக்கு மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளின் இயக்குநர்களுக்கு, அவர்களுடைய துணைவருக்கும் தங்கி வாழ்பவர்களுக்கும் அவ்வாறு முதலிடுகின்ற அமெரிக்க டொலரின் அளவுக்கமைய 5 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான நீண்ட கால வதிவிட விசா வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் அங்கீகாரமளிக்கப்பட்ட வணிக வங்கியொன்றில் குறைந்தது ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை வைப்பிலிடும் வெளிநாட்டவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கான வதிவிட விசா வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் 'தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித் திட்டம்' எனும் பெயரிலான நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ் அரசியல் வாதிகளிடம் ஒற்றுமை அறவே கிடையாது!

### யாழ். மறைமாவட்ட ஆயர் வேதனை

எமது அரசியல்வாதிகளிடம் ஒற்றுமை என்பது கிஞ்சித்தும் கிடையாது என தான் அமெரிக்க தூதுவரிடம் தெரிவித்தார் என யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்டீன் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் யாழ். மறைமாவட்ட ஆயரை திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே ஆயர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் நிலைமை பற்றியும் விசேடமாக வடக்கிலே என்ன மாதிரியான நிலைமை காணப்படுகின்றது என்பதை அமெரிக்கத் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

முப்பது வருடங்களாக இந்த சூழ்நிலையில் வாழ்ந்து வந்த பழக்கப்பட்டவர்கள். நாங்கள் அஹிம்சை வழியில் போராடினோம். அதற்குக் கிடைத்தது அடியும் உதையும். அடக்குமுறையை எதிர்த்து ஆயுத வழியில் முப்பது வருடம் போராட்டம் இடம்பெற்று அதுவும் தவறிவிட்டது. ஆகவே, இனி என்ன செய்வதென்று தெரியாமல் இறைவனிடம் மன்றாடுகிறோம்.

இங்குள்ள அரசியல்வாதிகள் தொடர்பில் அவர் என்னிடம் கேட்டார். நான் அவர்களிடம் கூறினேன். ஒற்றுமை என்பது எமது அரசியல்வாதிகளிடம் கிஞ்சித்தும் கிடையாது. பதவி தமது பரம்பரை சொத்து என்பது போல் அவர்கள் செய்யப்படுகின்றனர். ஏனையவர்கள் முன் வருவதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார். அதுவே அவர்களது குணமாக இருந்தது. – என்றார்.

## இலங்கையின் காப்புறுதியாளர்களை எச்சரிக்கும் ஃபிட்ச் மதிப்பீடுகள் நிறுவனம்

அதிகமான முதலீடுகள், பணப்புழக்க அபாயங்கள், ஒழுங்குமுறை மூலதன நிலைமைகள் மீதான அழுத்தம் மற்றும் மோசமான நிதி நிலை செயற்பாடுகள் ஆகியன இலங்கை காப்புறுதியாளர்களின் கடன் கோப்புகளில் குறுகிய கால அபாயத்தை அதிகரித்துள்ளன என நிதிச் சந்தைக்கான கடன் மதிப்பீடுகள் மற்றும் ஆய்வு நிறுவனமான ஃபிட்ச் மதிப்பீடுகள் எச்சரித்துள்ளது.

ஃபிட்ச் மதிப்பீடுகள் கடந்த வாரம் அனைத்து இலங்கை காப்புறுதியாளர்களையும் தேசிய அளவில் எதிர்மறை பார்வை மதிப்பீட்டில் தரவரிசைப்படுத்தியதை அடுத்து இந்த மதிப்பீடு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீடு கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனைக் குறிப்பதுடன் அதேவேளை எதிர்மறை பார்வை மதிப்பீடு கடனை திருப்பிச் செலுத்தும் திறன் மோசமடைந்து வருவதைக் காட்டுகிறது.

இலங்கையின் சர்வதேச இறையாண்மை கடன் மதிப்பீடு உட்பட பல்வேறு நிதி நிறுவனங்களின் அண்மைய எதிர்மறை பார்வை மதிப்பீடுகள், உள்நாட்டு வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட அரசாங்கப் பத்திரங்கள் மற்றும் வைப்புத் தொகைகள் மற்றும் பத்திரங்கள் ஆகியவற்றில் தமது முதலீடுகளை மேலாதிக்கம் செய்யும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு இருக்கும் ஆபத்தை அம்பலப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஃபிட்ச் மதிப்பீடுகள் இலங்கையின் சர்வதேச இறையாண்மைக் கடன் மதிப்பீட்டு தரப்படுத்தலை 'சி.சி.' இல் இருந்து 'சி' ஆகக் குறைத்துள்ளது. அதேவேளை பல நிதி நிறுவனங்களின் மதிப்பீடுகள் எதிர்மறை பார்வையாக குறைவாக கீழ் நோக்கி தரப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்மறைப் பார்லை என்பது ஒரு நிறுவனத்தின் மதிப்பீடு அதன் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனைக் குறிப்பதுடன் அதன் திருப்பிச் செலுத்தும் திறன் மோசமடைந்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதிக்குஎதிரானபிரேரணையை நாங்கள் கட்டாயம் ஆதரிக்க வேண்டும். ஜனாதிபதி அங்கு இருப்பதால் மக்களுக்கு எந்த விதமான நன்மையும் கிடையாது. ஆனால் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து வெளியேற்றுவதாக இருந்தால் அதற்கு பதிலாக யார் வரப் போகிறார்கள் என்ற கேள்வி உள்ளது. அதற்கு என்ன நடக்கப்போகின்றது என்பதை பார்த்துக்கொண்டே நடவடிக்கையில் இறங்கவேண்டும். நாட்டிலுள்ள ஸ்திரத்தன்மை இல்லாது போய்விட்டால் பொருளாதார ரீதியான மீள்கட்டுமானம் என்பது பாதிக்கப்படும்.

இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

தமிழ்க் கூட்டமைப்பு கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் சலுகைகளைப் பெற்றிருந்தது. ஆனால் தமிழ் மக்களுக்கு இந்தச் சலுகைகள் கிடைக்கவில்லை.

இவர்களை வெளியேற்றிவிட்டு யாரை நம்பப் போகின்றோம் என்ற கேள்வி இருக்கிறது. ஆகவே அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்பது எனது கருத்து.

ஜனாதிபதிக்குஎதிரானநம்பிக்கையில்லாப் பிரேரணை எடுக்கப் பட்டால் அவருக்கு எதிராக செயற்பட வேண்டும் என்பதே எனது கருத்து.

ஜனாதிபதி என்பதில் அவர் செய்த பிழைகள் இருக்கின்றன. அதேபோல பாதுகாப்புச்செயலாளராக இருந்த போது செய்த பிழைகள் பல இருக்கின்றன. ஆனால் ஜனாதிபதி என்ற முறையில் அவர் செய்த பிழைகள் என்று எடுத்து பார்ப்போமானால் முதலாவதாகப் பதவிக்கு வந்தவுடன் 2019 நாட்டுக்கு பெற வேண்டிய வரிகளை குறைத்து தனது ஆதரவாளர்களுக்கு நன்மையை கொடுக்கும் வண்ணம் பெருவாரியான வருமானத்தை இல்லாமல் செய்தமை குற்றம்.

மக்களுடன் கலந்தாலோசிக்காது – நிபுணர்களுடன்கலந்துஆலோசிக்காமல் – உடனடியாக அமுல்படுத்திய உரத்தடை நெருக்கடியை ஏற்படுத்தியது. இதன் காரணத்தினால் நெல் அறுவடை நன்றாக குறைந்திருக்கின்றது.

வெளிநாட்டில் இருந்து அரிசியை இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஜனாதிபதி செய்த பலவிதமான நடவடிக்கைகள் நாட்டை சீரழிக்கும் வகையில் அமைந்தன.

ஜனாதிபதிக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டு வந்தால் அதனை ஆதரிக்க வேண்டும். உண்மையும் இதுதான். அவரது கையாலாகாததனத்தினாலேயே நாடு மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. – என்றார்.

---

## விக்னேஸ்வரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீகாந்தா தெரிவித்திருக்கிறார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:–

இன்றையஅரசாங்கத்தின்தரப்பிலும், அரசை வீழ்த்துவதற்கு முன் நிற்கும் எதிரணி தரப்பிலும் இனவாதிகள் இருக்கிறார்கள். ஊழல் பேர்வழிகளுக்கும் குறைவில்லை. ஆனால் பிரச்சினை அதுவல்ல.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்திலிருந்து தொடர்ந்து தமிழ் மக்களுக்கு அநீதியே இழைத்து வந்திருக்கிறது. ஆகவே நம்பிக்கையில்லா பிரேரணை மீது அரசுக்கு எதிராக வாக்களிப்பதைத் தவிர வேறு தெரிவு எதுவும் தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் இல்லை. எங்கள் முன்னால் உள்ள தெரிவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அரசு வீழ்த்தப்பட்டால் அடுத்து என்ன என்பது வேறு பிரச்சனை. இனி வரப்போகும் அரசும் எமக்காக எதுவும் செய்யப் போவதில்லை. ஆனால் சிங்கள, பௌத்த பேரினவாதத்தை முன்னெடுத்துச் செயற்படும் எந்த அரசாங்கத்தையும் வீழ்த்துவதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை தமிழர் தரப்பு தவற விடக்கூடாது. பதில் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பம் வரும் போது உரிய பதிலை நாங்கள் வழங்கித்தானாக வேண்டும்.

நீதியரசர் விக்னேஸ்வரனுடன் நாளை (இன்று) ஏற்கனவே திட்டமிட்டபடி சந்தித்து பேச இருக்கிறோம். அப்போது இந்த விடயத்தில் நல்ல முடிவை எட்ட முடியும் என நாம் நம்புகிறோம். – என்றார்.

---

## பெரும்பான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் ‘காலைக்கதிர்’ நாளிதழுக்கு நேற்று மாலை அவர் வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

“நாடாளுமன்றப் பெரும்பான்மை எனக்கு இருக்கும் வரை என்னை யாரும் பிரதமர் பதவியில் இருந்து அகற்ற முடியாது. நாடாளுமன்றுக்கு வெளியில் போராட்டம் நடத்தும் மக்களின் குரல் – அவர்களது கோரிக்கை – எனக்குக் கேட்கின்றது. அவை பேசித் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள். ஒவ்வொரு அரசு வரும்போதும் மக்கள் போராட்டங்கள் நடக்கும். மக்கள் போராட்டங்களுக்காக அரசுகள் விலகுவது என்றால் எந்த அரசும் இந்த நாட்டில் இருக்க முடியாது. ஜனநாயக நாட்டில் போராட்டங்கள் வழமை. அவற்றின் கருத்துகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை. ஆனால் அதற்காக ஜனநாயக விரோத முறையில் அரசுகளை கலைக்கப்பட வேண்டும் என்பதல்ல.

2015 இல் ஜனாதிபதித் தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் முன்னரேயே, உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து புறப்பட்டு விட்டேன். ஜனநாயகத்துக்கு முரணான வகையில் பதவியைப் பிடித்து வைத்திருக்கும் எண்ணம் எனக்கு கிஞ்சித்தும் கிடையாது. ஆனால் இப்போது ஜனநாயக ரீதியில் பெரும்பான்மை என் பக்கம்தான் உள்ளது. ஆகவே நான் பிரதமராகப் பதவியில் நீடிப்பேன். அது மக்கள் தீர்ப்பு. சம்பந்தப்பட்டோர் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். வெளியில் ஆர்ப்பாட்டம் நடத்துவோர் எங்களோடு பேசலாம். பேசித் தீர்ப்பதற்கான வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கோருகிறேன்” – என்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

---

## 13ஐ முழுமையாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பி.பி.சி. தமிழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கும் 13ஆவது சட்டத் திருத்தத்தை ஆதரிக்கிறார் எனக் கூறிய சஜித், நாங்கள் இரட்டை நாக்கு கொண்டவர்கள் அல்லர் என்றும் தெரிவித்தார்.

அந்தச் சட்டத்திருத்தம் எதுவாக இருக்கிறதோ, அதை அவ்வாறே ஆதரிக்கிறோம். கவலைப்படாதீர்கள். நாங்கள் இரட்டை நாக்கு கொண்டவர்கள் அல்லர். அங்கு ஒன்றும், இங்கு ஒன்றும் பேசுபவர்கள் அல்லர். நாங்கள் எங்கள் கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்கள். எங்களின் அரசமைப்பின் ஒற்றையாட்சித் தன்மையை 13 ஆவது சட்டத் திருத்தம் பாதிக்காது. இதை உயர்நீதிமன்றம் தீர்மானித்தது. என் தந்தையும் 13 ஆவது சட்டத் திருத்தை ஆதரித்தார். அவரதுமகனாகியநானும்அதையேதான் செய்வேன்.

1987ஆம்ஆண்டு இந்திய – இலங்கை உடன்பாட்டின்படி 13 ஆவது சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனினும் மாகாண சபைகளுக்கு பொலிஸ், நிதி போன்ற அதிகாரங்களை வழங்குவதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகிறது. தமிழ் அரசியல் கட்சிகள் இந்தச் சட்டத் திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும்என்றுவலியுறுத்திவருகின்றன எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

குற்ற விசாரணைப் பிரேரணை, நம்பிக்கையில்லாப் பிரேரணை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது போன்ற புதிய கருத்துக்களை முன்னெடுப்பது, 20ஆம் சட்ட திருத்தத்தை திரும்பப்பெற்று, 19ஆவதைக் கொண்டு வருவது போன்ற பல வழிகளில் நாங்கள் செயலாற்றுவதைப் பரிந்துரைக்கிறோம் என்றம் அவர் கூறினார்.

இலங்கையில் இதுவரை இல்லாத பொருளாதர நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. கடந்த சில மாதங்களாகவே அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி கடுமையாக உயர்ந்திருக்கிறது. நாணயத்தின் மதிப்பு சுமார் இரண்டு பங்கு வரை சரிந்திருக்கிறது.

தற்போதைய நிர்வாகம், கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி, மற்றும் நாடாளுமன்றத்தில் இருக்கும் அவரது கூட்டாளிகள் இந்த சிக்கலை உருவாக்கியிருக்கிறார்கள். என்று சஜித் பிரேமதாஸ கூறினார்.

கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக கொழும்பு காலி முகத்திடலில் ஏராளமான பொதுமக்கள் அரசுக்கு எதிரான போராட்டத்தில் இரவும் பகலுமாக தொடர்ச்சியாக பங்கேற்றிருக்கிறார்கள். ஆயினும் ஜனாதிபதியோ, பிரதமரோ பதவி விலக இயலாது என அறிவித்து விட்டார்கள்.

இந்நிலையில் மக்கள் ஜனாதிபதியை வீட்டுக்குப் போகச் சொல்கிறார்கள். அவரது குடும்பத்தை வீட்டுக்குப் போகச் சொல்கிறார்கள். அரசாங்கத்தை வீட்டுக்குப் போகச் சொல்கிறார்கள். காலி முகத்திடலில் இருக்கும் இளைஞர்களும், பொது சமூகமும், பெரும்பான்மையான குடிமக்கள், மாற்றத்திற்காக ஏங்குகிறார்கள், பதற்றத்துடன் காத்திருக்கிறார்கள். அவர்களை ஏமாற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த தேர்தலில் அதற்கான விளைவுகளைச் சந்திக்க வேண்டும் எனவும சஜித் பிரேமதாஸ கூறினார்.

நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்களுமே இந்த நெருக்கடிக்குக் காரணம் என்று பல போராட்டக்காரர்கள் சொல்கிறார்கள். இதை எப்படிப் பார்க்கிறீர்கள் என்று சஜித்திடம் கேட்டபோது, அதை அதை நான் ஏற்றுக்கொள்ளவே மாட்டேன், என அவா குறிப்பிட்டார்.

நாங்கள் ஒரு புதிய கட்சி. பெப்ரவரி 2020ல் தான் நாங்கள் கட்சியை பதிவு செய்தோம். நாங்கள் ஒரு புதிய பயணத்தைத் துவங்கியிருக்கிறோம். அனைவருக்கும் செழிப்பைக் கொண்டுவரும் கொள்கையினால் வழிநடத்தப்படும் பயணம் – ஒரு சிலருக்கோ, ஓர் அரசியல் குடும்பத்தினருக்கோ அல்ல.

இலங்கையில் ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரத்தை வழங்கும் 20 ஆவது சட்டத் திருத்தம் 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் பிரதமரின் அதிகாரங்கள் குறைப்பட்டன. நாடாளுமன்றத்தைக் கலைப்பது உள்ளிட்ட கூடுதலான அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டன.

எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டால் 20 ஆவது சட்டத் திருத்தத்தை முழுமையாக ஒழிப்பதே முதல் வேலையாக இருக்கும் என்று சஜித் கூறினார்.

முதலும் முக்கியமுமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித்துவ முறையை மாற்ற வேண்டும். நிச்சயமாக. நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் கூட இருக்கக் கூடாது என்பதை உறுதி செய்வோம். கண்காணிப்புகள் இருப்பதை உறுதி செய்வோம், ஒற்றைப்படையாக முடிவுகள் எடுக்கும் முறையை எதிர்ப்போம். எனவும் அவர் குறிப்பிட்டார். தற்போதைய அரசை எதிர்த்தாலும் நாட்டின் நலனுக்கான திட்டங்களை ஆதரிக்கிறார் எனவும் சஜித் கூறினார்.

“சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி பலனளிக்கும் என்று நம்புகிறேன். சரியான கொள்கைகளை நான் ஆதரிப்பேன். ஆனால் அரசாங்கம் சரியான கொள்கைகளை பின்பற்றவில்லை. வேண்டுமென்றே இந்த நாட்டை அவர்கள் ஒரு குழப்பமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளார்கள்.

“தவணைகளை நிறுத்தி வைக்கவும் தள்ளிவைக்கவும் முயற்சிக்க வேண்டும். நமது இருதரப்பு, பலதரப்பு கூட்டாளிகளுடன் பேச்சு நடத்த வேண்டும். நமது கடன் பத்திரங்களை வைத்திருப்போருடனும் பேச்சு நடத்த வேண்டும். எனவும் சஜித் குறிப்பிட்டார்.

மேலும் இலங்கைக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி மேலும் உதவ வேண்டும் என வலியுறுத்துகிறார் என சஜித் பிரேமதாஸ கூறினார்.

இலங்கைக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு உதவும் படி இந்திய அரசின் பிரதிநிதிகளிடம் கூறியிருக்கிறேன். மேலும் இந்தியாவின் வரிசெலுத்துபவரால் தரப்படும் உதவி, மக்களின் நலனுக்குப் பயன்படுவதை உறுதி செய்யுமாறு கூறியிருக்கிறேன். என்றும் சஜித் தெரிவித்தார்.

இந்தியாவை விட சீனாவையே அதிகம் நாடுவதாக கூறப்படும் கருத்துகளை சஜித் மறுத்தார். அது குழந்தைத் தனமானது என்று அவர் கூறினார்.

---

## பொதுத் தேர்தலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜே.வி.பி. தலைவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

இந்த நாடாளுமன்றத்திற்குள் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது. ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டுமென பெரும்பான்மையான மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். எனவே இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடத்திற்கும் என குறிப்பிட்ட காலத்துக்கு மாத் திரம் இடைக்கால அரசாங்கத்தை அமைத்து பின்னர் பொதுத் தேர்தலை நடத்தி மக்களின் விருப்பத்திற்கு அமைய புதிய அரசாங்கத்தைத் தெரிவு செய்ய வேண்டும்.

தற்போது உள்ள நிதிப் பிரச்சினையால் இந்தத் தருணத்தில் பொதுத்தேர்தலை நடத்த முடியாது என்று சிலர் கூறுகின்றனர். இது காலத்தைக் கடத்தும் நொண்டிச் சாட்டாகும். தேர்தலுக்கு 13 மில்லியன் ரூபாய் மட்டும் தான் செலவாகும். தேவையில்லாத விடயங்களுக்கு அதிக பணத்தைச் செலவழிக்கின்றோம். இந்த நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக தேர்தலுக்கு செலவழிப்பது விலை உயர்ந்ததாக இருக்காது.

தற்போதைய ஜனாதிபதி பதவியில் இருக்கும் வரை இடைக்கால அரசாங்கம் உட்பட முன்வைக்கப்படும் எந்த ஒரு தீர்வுக்கும் ஜே.வி.பி. உடன் படமாட்டாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்பதே எங்களின் முன்மொழிவு. பின்னர் குறிப்பிட்ட காலத்திற்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து ஓர் இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும். அதன் பின்னர் பொதுத் தேர்தலுக்கு செல்ல வேண்டும். இந்த நாடாளுமன்றத்தால் முன்மொழியப்படும் எந்தவொரு தீர்வும் தற்போதைய நெருக்கடியைத் தீர்க்காது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசமைப்பின் விதிகளில் தொங்கிக் கொண்டிராமல் உடனடியாக பதவி விலக வேண்டும். அவர் இராஜினாமாச் செய்ய விரும்பவில்லை என்றால் அவர் வீட்டுக்குச் செல்லும் வரை மக்கள் தங்கள் போராட்டங்களை வலுப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஜே.வி.பியின் மூன்று எம்.பிக்களும் ஆதரவளிப்பார்கள். – என்றார்

காலைக்கதிர்
Kalaikkathir

# கொழும்பு அரசியலில் நடப்பதென்ன..?

**- ஆர்.சிவராஜா -**

பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த விலகுவாரா, இல்லையா என்பதுதான் நாட்டில் இப்போது பேச்சு.



நேற்று முன்தினம் இரவு அமைச்சரவைக் கூட்டம் முடிந்தபின்னர் ஜனாதிபதி மாளிகையில் கோட்டா, மஹிந்த, சமல், பஸில் ஆகியோர் ஒன்றுகூடி ஆலோசனைகளை நடத்தினர்.

பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த விலகவேண்டும் என்பதுதான் சமல், கோட்டாவின் கோரிக்கை.

என்றும் பெரிய அண்ணன் சமலின் சொல்லைத் தட்டாத மஹிந்த. அதற்கு சம்மதித்த போதும், பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த விலக கூடாதென்று பிடிவாதமாய் இருந்திருக்கிறார் பஸில்.

“கம்மன்பில 120 எம்.பிக்கள் இருப்பதாக சொல்வது எம்மை அச்சுறுத்தவே. அப்படி இருந்தால் அவர்கள் காட்டட்டும். எங்களுக்கு 105 பேருக்கும் மேல் ஆதரவுள்ளது. தமிழ்க் கூட்டமைப்பு நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிகாது என்று அறிந்தேன். எமக்கு ஆதரவளிக்கும்எம்.பிக்கள்எண்ணிக்கை இன்னும் கூடும். நாடாளுமன்றம் கூட முன்னர் அதனை நான் செய்வேன். அதுவரைப் பதவியை இராஜினாமா செய்ய வேண்டாம்” என்று இங்கு பஸில் ஆவேசமாகப் பேசினார் எனத் தகவல்.

ஆனால் பிரதமர் கௌரவமாக பதவி விலகினால் நல்லது என்று விளக்கிய சமல்,அப்படி நடந்தால் இப்போது உள்ள மக்களின் போராட்டம் கொஞ்சம் தணியும் என்ற சாரப்பட பதிலளித்துள்ளார்.

“முதலில் பிரதமரை அகற்றி, பின்னர் சில வாரங்களில் சபாநாயகரையும் அகற்றி, ஜனாதிபதியையும் குற்றவியல் பிரேரணையில் அகற்ற முயலுவார்கள். பிறகு பெரும் விளைவுகள் வரலாம்.” என்று அதற்கு பதிலளித்துள்ளார் பஸில்.

பிரதமர் பதவி விலக மாநாயக்க தேரர்மார் கேட்பதால், அப்படி நடக்காத பட்சத்தில் அவர்கள் தங்களின் சந்திப்புகளுக்கு நேரம் கூடத் தராத நிலைமை வரலாம்.அது மக்கள் எதிர்ப்புக்கு மேலும் வலுவூட்டும் என்று இங்கு பேசப்பட்டது.



“நான் பதவி விலக மாட்டேன். நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றி என்னை விலக்கட்டும். நான் எதிர்க்கட்சியில் சென்று அமர்கிறேன். எனக்கு எதிராக வாக்களிப்போரையும் நான் நேரடியாகப் பார்க்க ஆசைப்படுகிறேன். எதிர்க்கட்சியில் இருந்து நான் அரசியல் செய்வேன். நான் என்னசெய்வேன் என்பதை அப்போது பாருங்கள்” – என்று இங்கு குறிப்பிட்ட பிரதமர், இப்போது பலரின் உண்மை முகங்கள் அம்பலமாகியுள்ளன எனவும் சாடியுள்ளார்.

இது ஒரு பக்கம் இருக்க –

மறுபக்கம் டலஸ்,மைத்ரி உட்பட்டோர் நகர்த்திவரும் காய்கள் அவர்களுக்கு வெற்றியைதந்துள்ளன எனத் தெரிகிறது.

22 அமைச்சர்கள், அவர்களைக் கண்காணித்து ஆலோசனை வழங்க தேசிய நிர்வாக சபை, இடைக்கால அரசு இதுதான், தேசிய சபையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள், அமைச்சரவையில் தகுதியானவர்களுக்கு இடம் – என்று பேச்சு நடத்தப்படுகின்றது.

இந்தப் பேச்சுகள் குறித்தான தகவல்கள் அவ்வப்போது ஜனாதிபதியின் காதுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அதேசமயம் பொதுஜன பெரமுனவின் பல உறுப்பினர்கள் இடைக்கால அரசுக்கு ஆதரவு வழங்குகின்றனர். அவர்களில் ஒருதரப்பினர் இன்று புதன்கிழமை ஜனாதிபதியை சந்தித்து கடிதமொன்றை கையளித்து புதிய இடைக்கால அரசை அமையுங்கள் என்று கேட்கப்போகின்றனர்.

**கோட்டா - மஹிந்த உறவில் விரிசல்**

கடந்த சில நாள்களாக ஜனாதிபதி தம்பிக்கும் பிரதமர் அண்ணனுக்கு மிடையில் பெரும் முறுகல் நிலைமை ஏற்பட்



டுள்ளது.

பொதுஜன பெரமுன எம்.பிக்களின் ‘டபிள் கேமும்’ இதற்கொரு காரணம். உதாரணத்திற்கு நேற்றுக் காலை அலரி மாளிகையில் பிரதமருக்கு ஆதரவு தெரிவித்த இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னான்டோ நேற்று மாலை இடைக்கால அரசு தேவையெனவும் பெரும்பாலான எம்.பிக்களின் ஆதரவு அதற்குள்ளதாகவும் அறிக்கை விடுகிறார்.

இடைக்கால அரசுக்கு ஜனாதிபதி இஷ்டப்படுகிறார் என்பதால் அவரைச் சந்திக்கும்போது அவருக்கு ஆதரவு தெரிவிப்பதும், பின்னர் பிரதமர் தொலைபேசி அழைப்பெடுத்தால் பிரதமர் பதவியை தொடர அவருக்கு ஆதரவை தெரிவிப்பதும் பொதுஜன பெரமுன எம்.பிக்களுக்கு வாடிக்கையாகி இருக்கிறது.

**இந்தியாவும் சீனாவும்**

இதற்கிடையில் இந்தியாவும் சீனாவும் இலங்கை அரசியலில் புகுந்து விளையாடுகின்றன. ஜனாதிபதி பக்கம் இந்தியா நிற்கிறது. பிரதமர் பக்கம் சீனா நிற்கிறது என்று பேசப்படுகிறது. இதனால் கொழும்பில் இப்போது எம்.பி ஒருவரின் விலை தலைக்கு பல கோடிகள் என்ற ரீதியில் பேசப்படுகின்றன. அதுவும் டொலர்களில்.

கோட்டாவா, மஹிந்தவா வெல்வார் என்று பேசப்பட்டு இப்போது அது இந்தியாவா, சீனாவா என்று பேசுமளவுக்கு வந்திருக்கிறது.

இவற்றுக்கெல்லாம் அப்பால், பிரதமருக்கு ஆதரவு தெரிவித்து கையொப்பமிடும் எம்.பிக்கள் எண்ணிக்கை அதிகம் (113 தாண்டி )வந்தாலும்கூட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதிக்கப்படும் நாளில் அந்த எம்.பிக்கள் நாடாளுமன்றம் வரவில்லையெனில் கதை கந்தல் தான்.

இப்போதைய நிலைவரப்படி விமல், கம்மன்பில அணியின் கைகள் ஓங்கியிருக்கின்றன. அதற்கு காரணம் பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் சிங்கள வாக்குகளை மட்டும் நம்பியுள்ளனர்.

விமல் இருக்கும் இடத்திற்கு எவன் போவான்? என்று கேட்பது தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் மட்டுமே. ஆனால் விமல், கம்மன்பிலவின் வாய்வார்த்தைகளை அறிந்த தென்னிலங்கை எம்.பிமார் அவர்களைப் பகைத்து மக்களிடம் சென்றுவிடமுடியாது என்றே கருதுவது தெரிகிறது.



எம்.பிக்களின் ஆதரவை பெற நடத்தும் பேச்சுக்களின் போதெல்லாம், “ஊருக்கும் தொகுதிக்கும் எப்படிச் செல்வீர்கள்? எப்படி மக்களை சந்திப்பீர்கள்? என்பதை யோசியுங்கள்...” – என்று கூறி அச்சத்தை உண்டுபண்ணியே பேச்சை ஆரம்பிக்கிறது விமல் அணி. இதனால் ஊர்ப்புற எம்.பிக்கள் பலர் விமல், கம்மன்பில பின்னால் திரண்டுள்ளனர்.

இந்த நெருக்கடி சூழலில், முக்கியமான அரச அதிகாரிகள் நாட்டை விட்டு புறப்பட்டுள்ளனர். அவர்கள் திரும்பி வருவார்களா என்பது தெரியவில்லை. அது தவிர, அரச தலைவர்கள் பக்கத்தில் இருந்த அதிகாரிகள் இப்போது அலுவலகங்களுக்கு வருவதே குறைவு.பலர் அடுத்த நகர்வுகளுக்கு ஆயத்தமாகி செட் ஆகியுள்ளனர்.

நாடாளுமன்றம் கூட முன்னர் பல மாற்றங்கள் வரும் வாய்ப்பே இருக்கிறது. இடைக்கால அரசை ஏற்படுத்துவதில் ஜனாதிபதி மிக உறுதியாக இருக்கிறார்.



அதில் மாற்றமில்லை.

அப்படி அவர் செய்தால் இடைக்கால அரசுகுறித்தானதங்களதுகோரிக்கைக்கு மதிப்பளித்தார் என்று கருதி, மாநாயக்க தேரர்கள் காலிமுகத்திடலுக்கு வரலாம். ஜனாதிபதி வீடு செல்லக்கோரும் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேசி உத்தரவாதமொன்றை ஜனாதிபதி சார்பில் வழங்கலாம். மாநாயக்க தேரர்களின் பேச்சை தட்ட முடியாத நிலைமை போராட்டக்காரர்களுக்கு ஏற்படலாம்.

இன்று புதன்கிழமை,பொதுஜன பெரமுன எம்.பிக்கள் பெரும்பான்மையானோர் கையொப்பமிட்டு கடிதமொன்றை கையளித்தால் இடைக்கால அரசை ஏற்படுத்த பச்சைக்கொடி காட்டுவார் கோட்டா.



ஆனால் பிரதமரை பதவி நீக்கம் செய்யமாட்டார் ஜனாதிபதி. அதற்குத் தேவையில்லை. ஏனெனில் இடைக்கால அரசின் பிரதமர் ஒருவர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தால் மஹிந்தவின் பிரதமர் பதவி தானாகவே வலுவற்றதாகிவிடும்.

இடைக்கால அரசில் சில அமைச்சுக்கள் ஜனாதிபதியின் கீழ் வரவுள்ளன. சில அமைச்சர்களை ஜனாதிபதி நியமிப்பார். பாதுகாப்பும் ஊடகமும் ஜனாதிபதியின் கீழ் அல்லது அவர் சொல்பவருக்கு வழங்கப்படவேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

**சஜித் ஏன் இடைக்கால அரசை நிராகரிக்கிறார்..?**

சஜித் ஏன் இடைக்கால அரசை நிராகரிக்கிறார்..?



இடைக்கால அரசில் பதவியேற்றால், மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சி தலைவர் ஆகிவிடுவார். இப்போதுள்ள நெருக்கடியைத் தீர்க்க முடியாமற்போக, மக்கள் ஆதரவும் இல்லை, எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இல்லையென்றாகிவிடும் என்று கருதுகிறார் சஜித்.

அதற்குள் சம்பிக்க தனக்கென ஒரு அணியை திரட்டிக்கொண்டிருக்கிறார். இடைக்கால அரசில் பிரதமர் பதவியை சம்பிக்கவுக்கு வழங்குமாறு ஒரு தரப்பு கேட்டபோது ஜனாதிபதி அதற்கு சம்மதிக்கவில்லை. ஆனால் பொன்சேகாவுக்கு முக்கிய அமைச்சொன்றை கொடுக்கலாமென்று ஆலோசிக்கப்பட்டுள்ளது.

(நாளை தொடரும்)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=